தினமணி

**உணவுப் பணவீக்கம் 8.84 சதவீதமாகக் குறைவு**

First Published : 23 Sep 2011 12:26:48 AM IST



புது தில்லி, செப்.22: நாட்டின் உணவுப் பணவீக்கம் செப்டம்பர் 10-ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் 8.84 சதவீதமாகக் குறைந்துள்ளது. இருப்பினும் பெரும்பாலான பொருள்களின் விலைகள் அதிகமாகவே இருந்தன.

ஒட்டுமொத்த விலைப்புள்ளி அடிப்படையில் உணவுப் பணவீக்கம் கணக்கிடப்படுகிறது. இது முந்தைய வாரத்தில் 9.47 சதவீதமாக இருந்தது. கடந்த ஆண்டு இதே காலத்தில் 16.30 சதவீதமாக இருந்தது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் பெரும்பாலான உணவுப் பொருள்களின் விலைகள் உயர்ந்தே காணப்பட்டன. ஆனால் கோதுமையின் விலை 2.72 சதவீதம் குறைந்திருந்தது. அதேசமயம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் வெங்காயத்தின் விலை 29 சதவீதமும், உருளைக் கிழங்கு விலை 13.78 சதவீதமும், காய்கறிகள் விலை 12.13 சதவீதமும் உயர்ந்தும் காணப்பட்டது.

பழங்களின் விலை 17.67 சதவீதம் உயர்ந்திருந்தது. புரதச்சத்து நிறைந்த முட்டை, இறைச்சி, மீன் போன்ற உணவுகளின் விலைகள் 9.28 சதவீதம் உயர்ந்திருந்தன. கடந்த சில வாரங்களாக குறைந்து வந்த பருப்புகளின் விலைகள் முந்தைய வாரத்துடன் ஒப்பிடுகையில் 1.49 சதவீதம் குறைந்திருந்தது.

பெரும்பாலான பொருள்களின் விலைகள் உயர்ந்திருந்த போதிலும் உணவுப் பணவீக்கம் குறைந்திருப்பதாக நிபுணர்கள் தெரிவித்தனர்.

முதன்மைப் பொருள்களின் பணவீக்கம் 12.17 சதவீதமாகக் குறைந்திருந்தது. இது முந்தைய வாரத்தில் 13.04 சதவீதமாக இருந்தது.

உணவு அல்லாத பிற பொருள்களான கண்ணாடியிழை, கனிமம், எண்ணெய் வித்துகள் உள்ளிட்டவற்றின் விலை 17.42 சதவீதமாகக் குறைந்திருந்தது. முந்தைய வாரத்தில் இது 18.49 சதவீதமாக இருந்தது.

உணவுப் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த கடந்த ஆண்டிலிருந்து இதுவரை 12 முறை ரிசர்வ் வங்கி கடனுக்கான வட்டி விகிதத்தை உயர்த்தியுள்ளது. கடந்த ஓராண்டில் எப்போதும் இல்லாத அளவாக ஆகஸ்ட் மாதத்தில் பணவீக்கம் 9.78 சதவீத அளவுக்கு உயர்ந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி நடப்பு நிதி ஆண்டில் ஏப்ரல் முதல் ஜூன் வரையான காலகட்டத்தில் 7.7 சதவீதமாக இருந்தது. கடந்த 18 மாதங்களில் பொருளாதார வளர்ச்சி இந்த அளவுக்கு மந்தமாக இருந்தது இதுவே முதல் முறையாகும்.

**பயிர்காக்கும் இயற்கை மருந்துகள்**

First Published : 22 Sep 2011 03:36:18 PM IST

கடலூர் : இயற்கையாகக் கிடைக்கும் தாவர இலைச் சாறு, எண்ணெய், உப்புக் கரைசல், சாம்பல் போன்றவற்றைக் கொண்டே, பயிர்களைத் தாக்கும் பூச்சி பூஞ்சாணங்கள் உள்ளிட்ட நோய்களைக் கட்டுப்படுத்த முடியும் என்று வேளாண் துறை தெரிவிக்கிறது.

விதை நேர்த்திப் பணிகளை முறையாகச் செய்யாமல் விட்டாலும், தட்ப வெப்பநிலை மாற்றங்கள் காரணமாகவும், காற்று மற்றும் நீர் மூலமாகவும் பயிர்களை பூச்சிகள் பெருமளவுக்குத் தாக்கி சேதப் படுத்துகின்றன. மிகவும் அபாயகரமான விஷத் தன்மை கொண்ட பூச்சிக் கொல்லி மருந்துகள் பயன்படுத்தப் பட்டாலும், பூச்சிகள் முழுமையாகக் கட்டுப்படுத்தப்படுவது இல்லை.

ரசாயன பூச்சிக் கொல்லி மருந்துகள் மனிதர்களுக்கும், விலங்கினங்களுக்கும் பெருத்த சேதத்தை விளைவிக்கின்றன. பல நேரங்களில் பயிர்களுக்கு நன்மை செய்யும் பூச்சிகளும் சேர்த்து அழிக்கப்பட்டு விடுகின்றன.

எனவே ரசாயன பூச்சிக் கொல்லி மருந்துகளின் மோசமான விளைவுகளால், விவசாயிகள் பரவலாகப் பயன்படுத்தி வந்த, என்டோசல்ஃபான், டெமக்ரான் போன்றவை தடை செய்யப்பட்டு வருகின்றன.

எனவே இயற்கை மருந்துகளைப் பயன்படுத்துமாறு அண்மைக் காலமாக வேளாண் விஞ்ஞானிகள் சிபாரிசு செய்கின்றனர்.

அசுவணி, கம்பளிப்புழு, நெற்கதிர் நாவாய்ப் பூச்சி ஆகியவற்றைக் கட்டுப்படுத்த, ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீரில் 2 கிலோ மிளகாய்த்தூள் கலந்து, கரைத்து வடிகட்டித் தெளிக்கலாம்.

இலைச் சுருட்டுப் புழு, சாறு உறிஞ்சும் பூச்சி, புரோடினியா ஆகியவற்றைக் கட்டுப்படுத்த, 200 லிட்டர் தண்ணீரில் 2 கிலோ வேப்பெண்ணையைக் கலந்து, ஒட்டுதிரவமாக சோப்பு கரைசல் 200 மில்லி கலந்து தெளிக்கலாம்.

நெல் குலை நோய்க்கு வேலிக்காத்தான் இலைச்சாறு 20 கிலோவை, 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். அசுவணி, இலைப்பேன், வெள்ளை ஈ போன்றவற்றைக் கட்டுப்படுத்த, 200 லிட்டர் தண்ணீரில் 2 கிலோ மஞ்சள், மற்றும் 200 லிட்டர் தண்ணீரில் 8 கிலோ சாம்பல் கலந்து தெளிக்கலாம்.

நெல் இலைச் சுருட்டுப் புழுவைக் கட்டுப்படுத்த, 200 லிட்டர் தண்ணீரில் 2 கிலோ உப்பு மற்றும் 200 லிட்டர் தண்ணீரில் 8 கிலோ சாம்பல் கலந்து தெளிக்கலாம்.

அனைத்து காய் துளைப்பான் பூச்சிகளைக் கட்டுப்படுத்த 200 லிட்டர் தண்ணீரில், 2 கிலோ பூண்டு மற்றும் 200 லிட்டர் தண்ணீரில் 400 மில்லி மண்ணெண்ணெய் கலந்து தெளிக்கலாம்.

வெள்ளை ஈ, இலைப்பேன், மிளகாய்ப்பேன் ஆகியவற்றைக் கட்டுப்படுத்த 200 லிட்டர் தண்ணீரில் 6 லிட்டர் பசுக்கோமியம் மற்றும், 200 லிட்டர் தண்ணீரில் 200 மில்லி புகையிலைச்சாறு கலந்து தெளிக்கலாம். பாக்டீரியா, பூஞ்சாணம் நோயைக் கட்டுப்படுத்த 200 லிட்டர் தண்ணீரில் 10 கிலோ துளசி இலைச்சாறு கலந்து தெளிக்கலாம். அல்லது 200 லிட்டர் தண்ணீரில் 10 கிலோ பப்பாளி இலைச்சாறு கலந்தும் தெளிக்கலாம்.

அனைத்து சாறு உறிஞ்சும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த, 200 லிட்டர் தண்ணீரில் 2 கிலோ அரைத்த சீத்தாப்பழ விதை மற்றும் 200 லிட்டர் தண்ணீரில் 6 கிலோ சீத்தா இலைச்சாறு கலந்து தெளிக்கலாம்.

கம்பளிப் புழு பாக்டீரியாவைக் கட்டுப்படுத்த, 200 லிட்டர் தண்ணீரில் 10 கிலோ சோற்றுக் கற்றாளைச் சாறு கலந்து தெளிக்கலாம். கம்பளிப்புழு சுருள் பூச்சி, இலை சுருட்டுப் புழுக்களைக் கட்டுப்படுத்த, 200 லிட்டர் தண்ணீரில் 10 கிலோ வேப்ப இலைச்சாறு கலந்து தெளிக்கலாம்.

மிளகாய்ப் பேன், வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்த 200 லிட்டர் தண்ணீரில் 600 கிராம் புகையிலைச் சாறு கலந்து தெளிக்கலாம். நெல் இலை சுருட்டுப் புழுவைக் கட்டுப்படுத்த, 200 லிட்டர் தண்ணீரில் 20 கிலோ நெய்வேலி காட்டாமணிச் சாறு கலந்து தெளிக்கலாம். நெல் தூர்அழுகல், இலை அழுகல் நோயைக் கட்டுப்படுத்த, 200 லிட்டர் தண்ணீரில் 6 கிலோ வேப்பெண்ணெய் கலந்து தெளிக்கலாம்.

பாக்டீரியா இலைக் கருகல் நோயைக் கட்டுப்படுத்த, 200 லிட்டர் தண்ணீரில் 20 கிலோ குன்றிமணி இலைச்சாறு அல்லது வேப்ப இலைச்சாறு கலந்து தெளிக்கலாம். நிலக்கடலை தூர் அழுகல் நோயைக் கட்டுப்படுத்த, 200 லிட்டர் தண்ணீரில் 6 கிலோ வேப்பெண்ணெயுடன் ஒரு லிட்டர் சோப்புத் திரவம் கலந்து தெளிக்காலம்.

பயறு வகை சாம்பல் நோயைக் கட்டுப்படுத்த, 200 லிட்டர் தண்ணீரில் 6 கிலோ வேப்பெண்ணெயுடன் ஒரு லிட்டர் சோப்புத்திரவம் கலந்து தெளிக்கலாம். தென்னை வாடல் நோயைக் கட்டுப்படுத்த, 200 லிட்டர் தண்ணீரில் 5 கிலோ வேப்பம் பிண்ணாக்கு கலந்து, மரத்தைச் சுற்றி இட்டு மண்ணால் மூடிவிட வேண்டும்.

**மானாவாரியில் கொத்தமல்லி சாகுபடி**

First Published : 22 Sep 2011 02:24:17 PM IST

வேலூர்: வேலூர் மாவட்ட விவசாயிகள் மானாவாரி பயிராக கொத்தமல்லி சாகுபடி செய்ய இது நல்ல தருணம் என வேளாண் துறை அலுவலர் இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

மல்லியை கீரைக்காக மானாவாரி மற்றும் இறவையில் ஆண்டு முழுவதும் பயிரிடலாம். இது செம்மண், வண்டல் மண் மற்றும் கரிசல் மண்ணில் நன்கு வளரும் தன்மையுடையது.

வெப்பநிலை 35 டிகிரி செல்சியஸ் தாண்டினாலோ, மிக அதிக மழை பெய்தாலோ செடியின் வளர்ச்சி குன்றும்.

விதைப்பு

நிலத்தை இரண்டுக்கும் மேற்பட்ட முறை உழுது பண்படுத்திய பிறகு இறவைப் பயிருக்கு பாத்திகள் அமைத்தும், மானாவாரிப் பயிரை விதை விதைப்பான் மூலமும் வரிசைக்கு வரிசை 20 செ.மீ. இடைவெளியும், செடிக்கு செடி 15 செ.மீ. இடைவெளியும் விட்டு விதைக்க வேண்டும்.

விதைகளை இரண்டாக உடைத்து விதைக்க வேண்டும். இறவையில் ஹெக்டேருக்கு 10 முதல் 12 கிலோ கொத்தமல்லி விதை தேவை. விதைகளை மானாவாரியாக விதைத்தால் ஹெக்டேருக்கு 20 முதல் 25 கிலோ தேவை.

மானாவாரியாக சாகுபடி செய்யும்போது விதைகளை தூவும் முறையில் விதைத்து, நாட்டுக் கலப்பை மூலம் மூடிவிட வேண்டும்.

விதை நேர்த்தி

மானாவாரி கொத்தமல்லி விதைகளை பொட்டாசியம் டை ஹைட்ரஜன் பாஸ்பேட் கலந்த நீரில் 16 மணி நேரம் ஊற வைத்து விதைத்தால் வறட்சியை தாக்குப் பிடித்து வளரும்.

ஒரு லிட்டர் நீருக்கு 10 கிராம் மருந்து கலந்து ஊற வைத்து விதைப்பது சிறந்தது.

பின்னர் ஒரு ஹெக்டர் விதைக்கு 3 பொட்டலம் அசோஸ்பைரில்லம் கொண்டு விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

விதைக்கும் முன்பு ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் அளவில் டிரைக்கோடர்மாவிரிடி கொண்டு விதை நேர்த்தி செய்யலாம். பிறகு உலர்த்தி விதைத்தால் வாடல் நோய் வராது.

நீர்ப்பாசனம்

விதைத்த 8 முதல் 15-வது நாளில் விதை முளைக்க தொடங்கும். எனவே விதைத்தும் ஒரு முறையும், பிறகு 3-ம் நாள் ஒரு முறையும், 7 முதல் 10 நாள்களுக்கு ஒரு முறையும் நீர் பாய்ச்ச வேண்டும்.

உர நிர்வாகம்

கடைசி உழவின்போது ஒரு ஹெக்டேருக்கு 10 டன் நன்கு மக்கிய தொழுஉரம் இட வேண்டும். சூப்பர் பாஸ்பேட் உரம் ஹெக்டேருக்கு 188 கிலோ இட்டு கொக்கி கலப்பை மூலம் கடைசி உழவு செய்ய வேண்டும்.

இறவை பயிருக்கு மேல் உரமாக விதைத்த 30-ம் நாளில் ஹெக்டேருக்கு 22 கிலோ யூரியா இட வேண்டும்.

களைகள் முளைக்கும் முன்பு புளுக்ளோரலின் ஹெக்டேருக்கு 700 மில்லி மருந்தை 500 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும். தேவைப்படும்போது களையெடுக்க வேண்டும்.

கீரை அறுவடை

விதைத்த 30-ம் நாளில் இளங்கீரையாகவும், 60 மற்றும் 75-ம் நாள்களில் 50 சதவீதம் இலைகளையும் அறுவடை செய்யலாம்.

விதை அறுவடை

விதைத்த 90 முதல் 110 நாள்களுக்குள் விதைகளை அறுவடை செய்ய முடியும். காய்கள் நன்கு முதிர்ந்து பச்சை நிறத்தில் இருந்து பொன்னிறமாக மாறும்போது அறுவடை செய்வது நல்லது.

**சிறுவன மகசூல் உரிமை: பழங்குடியினர் கோரிக்கை**

First Published : 22 Sep 2011 10:54:00 AM IST

தருமபுரி, செப்.21: வனப்பகுதியில் சிறுவன மகசூல் உரிமையை பழங்குடியினருக்கு முழுமையாக வழங்க வேண்டும் என்று தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

அவ்வமைப்பின் மாவட்டக் குழுக் கூட்டம் தருமபுரி பெரியார் மன்றத்தில் புதன்கிழமை நடைபெற்றது. அதில் நிறைவேற்றப்பட்ட பிற தீர்மானங்கள்: தருமபுரி மாவட்ட பழங்குடி மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும், வத்தல்மலையில் காபி வாரியம் மூலம் சாகுபடிப் பரப்பை மேலும் விரிவுபடுத்தி, அனைத்துப் பழங்குடியினருக்கும் மானியம் வழங்க வேண்டும்.

வத்தல்மலை, பென்னாகரம் வட்டம் கோட்டூர் மலை, ஏரிமலை ஆகிய இடங்களில் சாலை வசதி ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஜார்க்கண்ட் மாநிலம் ராய்பூரில் அக்டோபர் மாதம் நடைபெறும் அகில இந்திய ஆதிவாசிகள் மாநாட்டில் பங்கேற்க பிரதிநிதிகளை அனுப்புவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. கூட்டத்தில், மாநிலச் செயலர் பி. கெம்பன், மாவட்டப் பொறுப்பாளர் ஜெ. பிரதாபன், வட்ட துணைச்செயலர் எஸ். சித்துராஜ் உள்பட பலர் பங்கேற்றனர்.

**வெள்ளாடு, நாட்டுக் கோழி வளர்க்க 27, 28-ல் பயிற்சி**

First Published : 22 Sep 2011 10:26:14 AM IST

திருப்பூர், செப். 21: வெள்ளாடு, நாட்டுக் கோழி வளர்ப்புக் குறித்த இலவச பயிற்சிகள் திருப்பூரில் செவ்வாய், புதன்கிழமைகளில் அளிக்கப்பட உள்ளது.

÷கால்நடை மருத்துவ பல்கலை. பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் சார்பில் திருப்பூரில் செவ்வாய்க்கிழமை (செப்27) வெள்ளாடு வளர்ப்பு குறித்தும், புதன்கிழமை (செப்.28) நாட்டுக்கோழி வளர்ப்பு குறித்தும் இலவச பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

÷திருப்பூர் பழைய பஸ்நிலையம் எதிரிலுள்ள கால்நடை மருத்துவமனை வளாகத்தில் காலை 10.30 மணி முதல் மாலை 4 மணி வரை நடக்க உள்ள இப்பயிற்சியில் திருப்பூர் மற்றும் சுற்றுப்புற மாவட்ட விவசாயிகள் பங்கேற்கலாம்.

÷வெள்ளாடு வளர்ப்பு, நாட்டுக் கோழி வளர்ப்பில் உள்ள விஞ்ஞான முறைகள், வர்த்தக வாய்ப்புகள் குறித்து இப்பயிற்சியில் தெரிவிக்கப்படும். மேலும், விவரங்களுக்கு 0421-2248524 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

÷கால்நடை மருத்துவ பல்கலை. பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத் தலைவர் ஆர்.செல்வராஜ் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**புதிய நுட்பங்களை அறிய விவசாயிகள் சுற்றுலா**

First Published : 22 Sep 2011 12:50:09 PM IST

பெரம்பலூர், செப். 20: விவசாயத்தில் புதிய தொழில்நுட்பங்களைக் கண்டறிய விவசாயிகள் வெளிமாநிலங்களுக்கு செல்லும் பயணம் திங்கள்கிழமை தொடங்கியது.

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் விவசாயிகள் பயணம் செல்லும் பேருந்தை மாவட்ட வருவாய் அலுவலர் எம்.ஏ. சுப்பிரமணியன் கொடியசைத்து தொடக்கி வைத்தார்.

இதுகுறித்து அவர் கூறியது:

தோட்டக்கலைத் துறை சார்பில், புதிய தொழில் நுட்பங்களை அறிந்து கொள்வதற்காக 100 விவசாயிகள் கொண்ட குழு பேருந்து மூலம் அழைத்துச் செல்லப்பட்டனர்.

இந்தக் குழு, விவசாயிகளுக்கு ஒரு வார காலம் பல்வேறு ஆராய்ச்சி நிலையங்களில் சாகுபடி முறைகள், நோய்த்தாக்கம், தடுப்பு முறை, உற்பத்தி பெருக்கம், நீர்பாசன முறைகள் குறித்து பயிற்சிகள் மற்றும் விளக்கங்கள் அளிக்கப்பட உள்ளது.

திருச்சி தேசிய வாழை ஆராய்ச்சி நிலையத்தில் வாழையில் மகசூல் பெருக்குதல் மற்றும் வாழை அடர்நடவு ஆகிய தொழில் நுட்பங்களையும், அருப்புக்கோட்டையில் உள்ள மண்டல தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தில் மானாவாரி பழப்பயிர்கள் சாகுபடி முறை, கோவில்பட்டியிலுள்ள மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் மானாவாரி மிளகாய், மருத்துவ பயிர்கள் சாகுபடி முறை, குற்றாலத்திலுள்ள பழப்பண்ணை
மற்றும் பூச்செடிகள், அலங்கார செடிகள் உற்பத்திகளை
பார்வையிட்டு புதிய தொழில் நுட்பங்களை கண்டறிய உள்ளனர்.

அதேபோல, கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் உள்ள கிழங்கு வகை ஆராய்ச்சி நிலையம், பீச்சியில் உள்ள கேரள வன ஆராய்ச்சி நிலையம், வேலுபாடத்திலுள்ள மூங்கில் ஆராய்ச்சி யைம், திருச்சூர் வேளாண்மை கல்லூரி மற்றும் வாழை ஆராய்ச்சி நிலையம், முந்திரி ஆராய்ச்சி நிலையம் மற்றும் உடுமலைப்பேட்டையில் உள்ள ஜெயின் பண்ணையில் மா அடர் நடவில் புதிய தொழில் நுட்பங்கள் குறித்த பயிற்சிகள் விவசாயிகளுக்கு அளிக்கப்பட உள்ளது.

இந்தப் பயிற்சிக்காக தோட்டக்கலை அலுவலர்கள் ஆனந்தன், துரை மற்றும் தோட்டக்கலைத் துறை பணியாளர்களும் விவசாயிகளுடன் செல்கின்றனர். இப்பயிற்சி சுற்றுலாவுக்கு தேசிய தோட்டக்கலை இயக்கம் நிதியுதவி அளித்துள்ளது என்றார் அவர்.

இந்நிகழ்ச்சியின் போது, தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் வே. செப்ந்தரராஜன், உதவி இயக்குநர் இரா. நலங்கிள்ளி தேன்மொழி, தமிழக விவசாயிகள் சங்க மாநிலச்செயலர் ஆர். ராஜாசிதம்பரம், திருவள்ளுவர் உழவர் மன்றத் தலைவர் கு. வரதராசன் மற்றும் முன்னோடி விவசாயிகள், விவசாய சங்கத்தினர் கலந்து கொண்டனர்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 85.42 அடி**

First Published : 22 Sep 2011 10:23:35 AM IST

ஈரோடு, செப்.21: பவானிசாகர் அணை நீர்மட்டம் புதன்கிழமை 85.42 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 1,944 கனஅடி தண்ணீர் வந்தது. ஆற்றில் விநாடிக்கு 1,000 கன அடியும், வாய்க்காலில் விநாடிக்கு 2,300 கனஅடி வீதமும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அணை நீர் இருப்பு 18.73 டிஎம்சி.

ஈரோடு, செப்.21: பவானிசாகர் அணை நீர்மட்டம் புதன்கிழமை 85.42 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 1,944 கனஅடி தண்ணீர் வந்தது. ஆற்றில் விநாடிக்கு 1,000 கன அடியும், வாய்க்காலில் விநாடிக்கு 2,300 கனஅடி வீதமும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அணை நீர் இருப்பு 18.73 டிஎம்சி.

**மஞ்சளுக்கு ஆதார விலையாக ரூ.10 ஆயிரம் அறிவிக்க வலியுறுத்தல்**

First Published : 22 Sep 2011 10:23:11 AM IST

ஈரோடு, செப். 21: மஞ்சள் குவிண்டால் ஒன்றுக்கு ஆதார விலையாக ரூ.10 ஆயிரம் நிர்ணயிக்க வேண்டும் என, பாஜக கோரிக்கை விடுத்துள்ளது.

பாஜக மாநில பிரசார அணித் தலைவர் ஆ.சரவணன், மாவட்ட ஆட்சியர் சி.காமராஜிடம் புதன்கிழமை அளித்த மனு விவரம்:

2010 அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் குவிண்டாலுக்கு ரூ.17 ஆயிரமாக இருந்த மஞ்சள் விலை, கடந்த 8 மாதங்களில் குவிண்டாலுக்கு ரூ.13 ஆயிரம் வரை குறைந்து, தற்போது ரூ.4 ஆயிரத்துக்கு விற்பனையாகிறது. உற்பத்திப் பொருளுக்கு சரியான விலை கிடைக்காததால் விவசாயிகள் கடும் இழப்பை சந்தித்து வருகின்றனர்.

கொள்முதல் விலை 75 சதத்திற்கும் மேல் சரிவடைந்துள்ளது. ஆனால், உலகச் சந்தையில் மஞ்சளின் விலை குறையாமல் உள்ளது. உள்ளூர் நுகர்வோர் சந்தையிலும் மஞ்சள் தூள் விலை மிகச் சிறிய அளவிலேயே குறைந்துள்ளது. உலகச் சந்தையிலும் உள்ளூர் சந்தையிலும் விலை குறையாத நிலையிலும் அதிக உற்பத்தியைத் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு நுகர்வோரும் விவசாயிகளும் பயனடையாமல் இடைத்தரகர்கள் தடுத்து வருகின்றனர்.

தேசிய கணக்கெடுப்பு நிறுவனம் மேற்கொண்ட ஆய்வின்படி மொத்தமுள்ள 8.93 கோடி விவசாயிகளில் 4.34 கோடி விவசாயக் குடும்பங்களுக்கு (48.6 சதம்) கடன் தொல்லை உள்ளதாகவும், இதில், ஆந்திர மாநிலம் 74.5 சதத்துடன் முதலிடத்திலும், தமிழ்நாடு 74.5 சதத்துடன் 2-வது இடத்திலும் உள்ளது என்றும் தெரிவித்துள்ளது. மஞ்சள் உற்பத்தியிலும் இந்த


2 மாநிலங்கள் தான் முன்னிலையில் உள்ளன. அதிக உற்பத்திச் செலவு ஏற்படுவதால், போதிய விலை இல்லாமல் மஞ்சள் விவசாயிகளுக்கு அதிக இழப்பு ஏற்படுகிறது.

மஞ்சளுக்கு குறைந்தபட்ச ஆதார விலையாக குவிண்டாலுக்கு ரூ.10 ஆயிரமாக நிர்ணயம் செய்ய வேண்டும். மஞ்சளை அரசே கொள்முதல் செய்து இருப்பு வைக்கவும், ஏற்றுமதி வாய்ப்புகளைக் கண்டறிந்து ஏற்றுமதியை அதிகரிக்கவும், தமிழக அரசு கூட்டுறவு சங்கங்கள் மூலம் நேரடியாக விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்து, மஞ்சளை தூளாக அரைத்து பொதுவிநியோக அமைப்பு மற்றும் கூட்டுறவு அங்காடி மூலம் விற்பனை செய்யவும் நடவடிக்கையெடுக்க வேண்டும்.

தினமலர்
உண்மையின் உரைகல்

**உணவுப் பொருள் பணவீக்கம் 8.84 சதவீதமாக குறைந்தது**

செப்டம்பர் 23,2011,04:37




புதுடில்லி : நாட்டின் உணவுப் பொருள் பணவீக்கம், செப்டம்பர் 10ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில், 8.84 சதவீதமாகக் குறைந்துள்ளது. இது, இதற்கு முந்தைய வாரத்தில், 9.47 சதவீதம் என்ற அளவில், அதிகரித்துக் காணப்பட்டது. ஆக, உணவுப் பொருள் பணவீக்கம், 0.63 சதவீதம் குறைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வாரத்தில், ஆண்டுக் கணக்கில், கோதுமை விலை 2.72 சதவீதம் குறைந்துள்ளது. அதேசமயம், வெங்காயத்தின் விலை, 29 சதவீதம் அதிகரித்துள்ளது. மேலும், உருளைக்கிழங்கின் விலை 13.78 சதவீதமும் மற்றும் அனைத்து வகையான காய்கறிகளின் விலை 12.13 சதவீதமும் உயர்ந்துள்ளது.

இது தவிர, பால் (10.38 சதவீதம்), பழங்கள் (17.67 சதவீதம்), மீன், இறைச்சி மற்றும் முட்டை ஆகியவற்றின் விலை ( 9.28 சதவீதம்) உயர்ந்துள்ளது. மதிப்பீடு வாரத்தில், உணவு தானியங்கள் விலை 4.13 சதவீதம் உயர்ந்துள்ளது. இருப்பினும், கடந்த சில மாதங்களாக, பருப்பு வகைகளின் விலை குறைந்து வருகிறது. இதன்படி, பருப்பு வகைகளின் விலை 1.49 சதவீதம் குறைந்துள்ளது. முக்கிய உணவுப் பொருள்களின் விலை, 12.17 சதவீதமாக குறைந்துள்ளது. இது, இதற்கு முந்தைய வாரத்தில், 13.04 சதவீதமாக அதிகரித்துக் காணப்பட்டது. மொத்த விலைக் குறியீட்டு எண் கணக்கீடு செய்வதில், முக்கிய பொருட்களின் பங்களிப்பு, 20 சதவீதத்திற்கும் மேல் உள்ளது. உணவு சாரா பொருட்கள் பிரிவில், நூலிழை, எண்ணெய் வித்துக்கள் மற்றும் தாதுப் பொருட்களின் விலை, 17.42 சதவீதமாகச் சரிவடைந்துள்ளது. இது, இதற்கு முந்தைய வாரத்தில், 18.49 சதவீதமாக உயர்ந்திருந்தது. அதே நேரத்தில், எரிபொருள் மற்றும் மின்சாரம் ஆகியவற்றிற்கான பணவீக்கம், 13.96 சதவீதமாக மிகவும் அதிகரித்துள்ளது. இது, இதற்கு முந்தைய வாரத்தில், 13.01 சதவீதம் என்ற அளவில் குறைந்திருந்தது. சென்ற ஆகஸ்ட் மாதத்தில், தயாரிப்புத் துறை பொருட்கள், எரிபொருள் மற்றும் உணவு சாரா பொருட்களின் பண வீக்கத்தால், சென்ற ஆகஸ்ட் மாதத்தில் நாட்டின் பொதுப் பணவீக்கம், கடந்த 13 மாதங்களில் இல்லாத அளவிற்கு, 9.78 சதவீதமாக அதிகரித்துக் காணப்பட்டது. பணவீக்கத்தைக் கட்டுக்குள் கொண்டு வரும் வகையில், ரிசர்வ் வங்கி, கடந்த 2010ம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து, இதுவரையிலுமாக, வங்கிகளுக்கான வட்டி விகிதத்தை, 12 முறை உயர்த்தியுள்ளது. இருப்பினும், முக்கிய உணவுப் பொருட்களின் விலை, உயர்ந்தே காணப்படுவது, நடுத்தர மக்களுக்குப் பெரும் சுமையாகவே உள்ளது.

**தேயிலை இறக்குமதி 22 சதவீதம் சரிவு**

செப்டம்பர் 23,2011,04:36



புதுடில்லி : நாட்டின் தேயிலை இறக்குமதி, ஏப்ரல் முதல் ஜூலை வரையிலான நான்கு மாத காலத்தில், 22 சதவீதம் சரிவடைந்து, 52 லட்சம் கிலோவாக குறைந்துள்ளது. இது, சென்ற ஆண்டின், இதே காலத்தில், 66 லட்சம் கிலோவாக அதிகரித்து காணப்பட்டது. சர்வதேச அளவில்,

தேயிலை பயன்பாட்டில் இந்தியா முன்னிலையில் உள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட தேயிலை பதப்படுத்தப்பட்டு மீண்டும் உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. எனவே, இறக்குமதி குறைந்துள்ள நிலையில், இதன் தாக்கம் தேயிலை ஏற்றுமதியிலும் பாதிப்பை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. நடப்பு 2011-12ம் நிதியாண்டின் முதல் நான்கு மாதங்களில், சீனா, கென்யா, வியட்நாம், ஸ்ரீலங்கா, ஈரான், அர்ஜென்டினா மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளிலிருந்து, இந்தியா தேயிலையை இறக்குமதி செய்து கொள்வது குறைந்து போயுள்ளது. கடந்த ஜூலை மாதத்தில் மட்டும், இந்தியாவின் தேயிலை இறக்குமதி 19 சதவீதம் சரிவடைந்து, 21 லட்சம் கிலோவிலிருந்து, 17 லட்சம் கிலோவாக குறைந்து போயுள்ளது. நடப்பு 2011ம் காலண்டர் ஆண்டின் கணக்கீட்டின்படி, ஜனவரி முதல் ஜூலை வரையிலான, தேயிலை இறக்குமதி, 19 சதவீதம் சரிவை சந்தித்து, 94 லட்சம் கிலோவாக வீழ்ச்சி கண்டுள்ளது. இது, கடந்த 2010ம் காலண்டர் ஆண்டின் இதே காலத்தில், 1 கோடியே 16 லட்சம் கிலோவாக அதிகரித்திருந்தது. உலகளவில், தேயிலை உற்பத்தியில் இந்தியா இரண்டாம் இடத்தில் உள்ளது. சர்வதேச அளவிலான தேயிலை உற்பத்தியில் நம்நாட்டின் பங்களிப்பு 28 சதவீதமாக உள்ளது. அதேநேரத்தில், தேயிலை வர்த்தகத்தில், இந்தியாவின் பங்களிப்பு 14 சதவீதமாக உள்ளது. நம்நாட்டில், 1,600 தேயிலை எஸ்டேட்டுகள் உள்ளன. இத்துறை, 20 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பை வழங்கிவருகிறது.

**மானியத்தில் பயிறுவகை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 23,2011,01:05 IST

வருஷநாடு : கடமலைக்குண்டு விவசாயத் துறையில் விவசாயிகளுக்கு பயிறு வகைகள் மானியத்துடன் வழங்கப்படுகிறது. உதவி இயக்குனர் சங்கரன் கூறியதாவது: கடமலைக்குண்டு, மயிலாடும்பாறை, வருஷநாடு, கோம்பைத்தொழு, சிங்கராஜபுரம், கண்டமனூர், ராஜேந்திரநகர், பாலூத்து, குமணந்தொழு, வாலிப்பாறை, தும்மக்குண்டு, சிங்கராஜபுரம், முருக்கோடை, மூலக்கடை,முத்தலாம்பாறை, உட்பட பல கிராமங்களில் தோட்டம்,மற்றும் மானாவாரி விவசாயம் அதிகமாக உள்ளது. விவசாயத்துறை மூலமாக தட்டான்பயிறு 12 சதவீதம்,பாசிப்பயிறு 30 சதவீதம், நுண்ணுயிர் உரம் மானியத்துடன் வழங்கப்பட்டு வருகிறது. தேவைப்படும் விவசாயிகள் விவசாயத் துறை அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் என்றார்.

**வேளாண்மை துறை பணிகள் உலக வங்கி குழுவினர் ஆய்வு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 23,2011,01:54 IST

ஊத்துக்கோட்டை : தமிழ்நாடு நீர்வள, நிலவளத் திட்டத்தில் வேளாண்மைத் துறையின் கீழ் நடைபெறும் பணிகளை, உலக வங்கிக் குழுவினர் ஆய்வு செய்தனர். எல்லாபுரம் ஒன்றியம் கொமக்கம்பேடு, வடமதுரை ஆகிய கிராமங்களில் உள்ள வயல்வெளிகளில், பசுந்தாழ்

உரப்பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. தாமரைப்பாக்கம், கிளாம்பாக்கம், வடமதுரை, தும்பாக்கம், தண்டலம் ஆகிய கிராமங்களில் மண்புழு உரம் தயாரித்தல், திருந்திய நெல் சாகுபடி பணிகள் நடந்து வருகின்றன. இப்பணிகள் உலக வங்கி நிதியுதவியுடன் நடந்து வருகிறது. இப்பணிகளை உலக வங்கிக் குழு வேளாண்மை வல்லுனர் பெஞ்சமின் பார்வையிட்டு, விவசாயிகளிடம் செயல்முறை குறித்து கேட்டறிந்தார். அப்போது, வேளாண்மைத் துறை இயக்குனர் கணேசன், தமிழ்நாடு பொதுப்பணித் துறை நீர்வள, நிலவளத் திட்ட மேலாண்மை வல்லுனர் சந்திரகுமார், மாவட்ட வேளாண்மை இயக்குனர் (பொறுப்பு) சீனிவாசலு உட்பட வேளாண் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

**கரும்பு சாகுபடி பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 23,2011,01:23 IST

விழுப்புரம்:திருந்திய கரும்பு சாகுபடி முறைகள் குறித்த பயிற்சி முகாம் கண்டமானடி கிராமத்தில் நடந்தது.ஆரோவில் வாட்டர் ஹார்வெஸ்ட் மற்றும் நபார்டு நிறுவனம் சார்பில் கண்டமானடி கிராமத்தில் நடந்த முகாமில் வானூர் வட்ட விவசாயிகள் 50 பேர் பங்கேற்றனர்.வானூர் வட்ட வேளாண்மை உதவி இயக்குனர் கென்னடி ஜெபக் குமார், வேளாண்மை அலுவலர் எத்திராஜு, ஆரோவில் வாட்டர் ஹார்வெஸ்ட் திட்ட அலுவலர் தண்டபாணி, கள அலுவலர் ஞான வேல் பயிற்சியளித்தனர்.

**தரமான விதை விற்பனை வேளாண் துறை அறிவுரை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 23,2011,01:43 IST

கிருஷ்ணகிரி: "கிருஷ்ணகிரி மாவட்டத்தில், விதை விற்பனையாளர்கள் தரமான விதைகளை விற்பனை செய்ய வேண்டும்' என, விதைபரிசோதனை நிலைய வேளாண் அலுவலர் ஜான் லூர்து சேவியர் வேண்டுகோள் விடுத்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. பல நேரங்களில், விவசாயிகள் நிலங்களில் விதைக்கும் விதைகள் தரமானதாக இல்லாமல் போவதால், சாகுபடி பாதிக்கப்படுகிறது. இதனால், விவசாயிகள் நஷ்டமடைந்து வருகின்றனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள விதை விற்பனையாளர்கள், கண்டிப்பாக அரசின் விதை வணிக உரிமம் பெற்று விதை விற்பனையில் ஈடுபட வேண்டும். ஏற்கெனவே, விதை வணிக உரிமம் பெற்று விதை விற்பனை செய்யும் விதை விற்பனையாளர்கள், தங்களின் உரிமத்தை காலாவதி தேதிக்குள் புதுப்பித்து விற்பனையை தொடரவேண்டும். மேலும், விதை விற்பனையாளர்கள் விற்பனை

செய்யும் விதைக்குவியல்களின் தரமறிந்து, விவசாயிகளுக்கு விதையினை விற்பனை செய்ய வேண்டும். விதை உற்பத்தியாளர்கள் அல்லது மொத்த விதை விற்பனையாளர்களிடமிருந்து விதைக்கொள்முதல் செய்யும் போது, விற்பனை பட்டியல்களுடன் விதை முளைப்புதிறன் பகுப்பாய்வறிக்கையையும் கேட்டு சரிபார்க்க வேண்டும். பகுப்பாய்வறிக்கை பெறப்படாத விதைக்குவியல்களில் இரு ந்து, பணி விதை மாதிரிகள் எடுத்து கிருஷ்ணகிரி மோகன்ராவ் காலனி குறுக்கு தெருவில் செயல்பட்டு வரும் விதைப்பரிசோதனை நிலையத்துக்கு அனு ப்பி வைத்து பகுப்பாய்வறிக்கையினை பெற்று விதை குவியல்களின் தரமறிந்து நல்ல தரமான விதைகளை விவசாயிகளுக்கு விற்பனை செய்ய வேண்டும். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.